**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.</u>**

**<u>O.S. No. 47 /2022 DW1</u>**

26.06.2025 **பி.வா.சா.1 பாவாடை சத்திய வாக்குமூலத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

எனக்கு தற்போது 73 வயதாகிறது. எனது மனைவி பெயர் மணி. என்னுடைய முதல் மகன் செந்தில்குமார் இறந்து விட்டார். என்னுடைய இரண்டாவது மகன் பெயர் பிரபாகரன். பிரபாகரனுக்கு 40 வயதாகிறது. பிரபாகரன் தச்சு வேலை செய்கிறார். மாதம் பிரபாகரன் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்று கேட்டால் சுமார் ரூ. 5000/- சம்பாதிக்கிறார். பிரபாகரனுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நன்றாகத்தான் உள்ளார். ஆனால் அவருக்கு திருமணம் ஆகவில்லை. எனது 3வது மகன் பெயர் மணிகண்டன். மணிகண்டனுக்கு 10.06.2016ந் தேதி அனுஷ்கா என்பவருடன் திருமணம் ஆனது என்றால் சரிதான். வாதி மணிகண்டனின் திருமணத்திற்கு ரூ. 5 லட்சம் கடன் கொடுத்துள்ளார் என்றால் இல்லை. மணிகண்டன் அவரது முதல் மனைவி அனுஷ்காவுடன் இருந்த திருமண பந்தத்தை காவல் நிலையத்திலேயே வைத்து பேசி ஜனவரி 2023ல் முறித்துக் கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி திருமண முறிவின் போது அனுஷ்காவிற்கு 1 பவுன் நகை, அவர் திருமணத்தின் போது கொண்டு வந்த சீர்வரிசை பொருட்கள் அனைத்தையும் கொடுத்து விட்டோம். மணிகண்டனுக்கு இரண்டாவது திருமணம் ஆனதா என்றால் இல்லை. ஆனால் அவராகவே ஜெயந்தி என்பரை அழைத்துக் கொண்டு வந்து குடும்பம் நடத்தி வருகிறார். மணிகண்டன் எங்களுடன் சேர்ந்து வாழவில்லை. மணிகண்டன் சமாராக மாதம் ரூ. 7 ஆயிரம் சம்பாதிப்பார். எனது கடைசி மகன் பெயர் ராஜீவ் காந்தி என்றால் சரிதான். அவருக்கு கௌரி என்பவருடன் திருமணம் ஆகி 2 குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். ராஜீவ் காந்தி மாதம் சமாராக ரூ. 7 ஆயிரம் சம்பாதிப்பார். 4வது மகன் ராஜீவ் காந்தி திருமணம் ஆகி மணலூர் பேட்டையில் தனிக்குடித்தனம் நடத்தி வருகிறார். தற்போது எனது வீட்டில் நான், எனது மனைவி மற்றும் பிரபாகரன் ஆகியோர் வசித்து வருகிறோம். எனக்கு வயதாகிவிட்டதால் கடந்த 2 - 3 வருடமாக நான் தச்சு வேலை செய்யவில்லை. எனது மனைவி மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பிற்கு சென்று வரும் வருமாணத்தின் மூலமாக நான் எனது மனைவி மற்றும் பிரபாகரன் குடும்பம் நடத்துகிறோம் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் பச்சையப்பன். எனது அப்பாவிற்கு 2 மனைவிகள். முதல் மனைவி பெயர் ராஜாம்பாள், இரண்டாவது மனைவி பெயர் பச்சையம்மாள். முதல் மனைவிக்கு நான், பானு, அப்பாவு ஆகிய 3 மகன்கள் என்றால் சரிதான். என் அப்பாவின் இரண்டாவது மனைவிக்கு பழனி, ஏழுமலை என்ற இரண்டு மகன்கள் என்றால் சரிதான். எங்களுக்கு பூர்வீக சொத்து கொட்டையூர் கிராமத்தில் உள்ளது. சர்வே எண் 101/2பி1 என்றால் சரிதான். கடந்த 27.05.2002ம் ஆண்டு கோவிந்தன் என்பவருக்கு பூர்வீக சொத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை கிரையம் செய்தோம் என்றால் சரிதான். அதன் கிரைய

பத்திர பதிவு எண் 717/2002 என்றால் சரிதான். 25.07.2005ம் ஆண்டு எனது சகோதரர்களான பழனி, பானு, அப்பாவு, ஏழுமலை ஆகியோரிடம் இருந்து ஆவண எண் 1401/2005ன் மூலம் சில சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். எனது முகவரி என்ன என்று கேட்டால் கதவு எண் 154 ஆலமரத் தெரு, கொட்டையூர் கிராமம், தென்கரும்பலூர் அஞ்சல் ஆகும். அதே கொட்டையூர் கிராமத்தில் தான் வாதியும் அவரது கணவர் நமச்சிவாயமும் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். நமச்சிவாயத்தின் அப்பா பெயர் மாணிக்கம் உடையார். நமச்சிவாயம் அவரது பூர்வீக சொத்தின் 13 செண்ட் நிலத்தை ஆவண எண் 957/2010 ன் மூலம் எனக்கு விற்றார் என்றால் சரிதான். நமச்சிவாயத்தின் மூத்த மகன் பெயர் பழனி, இரண்டாவது மகன் பெயர் சிங்காரவேல் என்றால் சரிதான். நமச்சிவாயம் நிலத்தை விற்கும் போது முதல் மகனுக்கு 17 வயது, இரண்டாவது மகனுக்கு 15 வயது என்றால் சரிதான். நமச்சிவாயம் அவரது மகன்களின் படிப்பிற்காகவும், குடும்ப செலவிற்காகவும் நிலத்தை என்னிடம் விற்றார் என்றால் சரிதான். மேற்படி நமச்சிவாயத்திடம் இருந்து வாங்கிய கிரைய பத்திரத்தில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் ரூ. 1 லட்சத்திற்கு மேல் வாங்கினேன் என்றும், ஆனால் ஆவணத்தில் ரூ. 75 ஆயிரம் போட்டுள்ளது என்றால் சரிதான். வாதி நிலத்தின் மதிப்பு அதிகமாகி விட்டது அதனால் ரூ. 25 லட்சம் கேட்டு என்னை மிரட்டினார் என்று எனது வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வாதி அவ்வாறு என்னை மிரட்டியது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வாதி என்னிடம் நிலத்தை வாங்க வேண்டும் என நினைத்திருந்தால் வாதியின் இரண்டு மகன்களை வைத்து என் மீது வழக்கு போட்டு இருக்க முடியுமா என்றால் சட்டப்படி இருக்கலாம். நமச்சிவாயத்திடம் இருந்து வாங்கிய நிலத்தின் பட்டா எண் 295 என்றால் சரிதான். **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
**திருவண்ணாமலை.**